இணைப்பு

(132ம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா எண். 500-க்கான விடையைக் காண்க.)

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வேளாண்மை பொறியியல் அலுவலகத்தில் '14' பாறை உடைக்கும் கருவிகள் உள்ளன. இவைகளில் '5' விழுப்புரத்திலும், '8' விருத்தாசலத்திலும், '1' கடலூரிலும் உதவி செயற் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அலுவலகங்களில் உள்ளன.

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பாறை உடைக்கும் கருவிகள் அனைத்தும் விவசாயிகளுக்கு, வாடகைத் திட்டத்தின் கீழ் வாடகைக்கு விடப்படுகின்றன. இயந்திரம் தேவைப்படும் விவசாயி, உதவி செயற் பொறியாளருக்கு மனு செய்துகொண்டு ரூ. 10-ஐ ஆய்வு கட்டணமாக முன் பணம் செலுத்த வேண்டும். இந்த விவசாயியின் பெயர் முன் உரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு உரிய இளநிலைப் பொறியாளருக்கு/உதவி பொறியாளருக்கு இந்த விவசாயியின் நிலத்தினையும், கிணற்றையும், பார்வையிட ஆணை வழங்கப்படும். இளநிலைப் பொறியாளர்/உதவி பொறியாளர் வேளாண்மை செய்யும் நிலத்தினையும் கிணற்றையும் பார்வையிட்டு இயந்திரம் வழங்குவதற்கு பரிந்துரை செய்வார். இயந்திரம் வழங்குவதற்கு பரிந்துரை செய்தபின், வாடகை விவரம் அனைத்தும் விவசாயிக்கு தெரிவிக்கப்பட்டு முன்பணம் கட்டுவதற்கு தகவல் தரப்படுகிறது. மேலும் வெடி மருந்து வழங்குவதற்கும் உரிய படிவங்கள் கொடுக்கப்பட்டு, வெடி மருந்து தேவையினை கணக்கிட்டு அதனை மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்க்கு உரிமம் வழங்க பரிந்துரை செய்து அனுப்பப்படும். மேற்கண்ட தகவலைப் பெற்றுக் கொண்ட விவசாயி முன்பணமாக வைப்புத் தொகையாக ரூபாய் 100-ம், ரூ. 200 (ஐந்து நாட்கள் வாடகையாக) ம் அலுவலகத்தில் செலுத்தி கருவியினை எடுத்து தம் நிலத்தில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுவார்.

உட

வெடி மருந்திற்கான உரிமம் பெற்று பாறை வெடி கருவியினை மனுதாரரின் வேலை இடத்திற்கு எடுத்துச் சென்ற உடன், அக்கிணற்றிற்கு தேவைப்படும் வெடி மருந்து இத்துறை வெடி மருந்து கிடங்கிலிருந்து அதற்கான கிரயத்தை வசூலித்துக்கொண்டு கொடுக்கப்படும். ஒவ்வொரு தடவையும் அதற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள வெடி மருந்தினை உபயோகப் படுத்தியதை அறிந்துதான் கொடுக்கப்படுகிறது.

1979 நவம்பர் 2]

(இ) பாறை வெடி கருவிகள் கீழ்க்கண்ட நடைமுறைகளின்படி விடப் படுகின்றன:—

1. ரூபாய் 10 ஆய்வுக் கட்டணமாக முன்பணம் கட்டியவுடன், விவசாயியின் கிணற்றினை பார்வை செய்து, கருவி வேலை செய்வதற்கு ஏற்றவாறு இருப்பின், வெடி மருந்து வழங்க உரிய படிவங்கள் வழங்கப்பட்டு, வெடி மருந்து தேவையினை மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்க்கு பரிந்துரை செய்து அனுப்பப்படுகிறது. மேலும் விவசாயிக்கு வைப்புத் தொகை ரூபாய் 100-ம் வாடகைத் தொகை ரூ. 200 (ஐந்து நாட்களுக்கு) கட்டவும் தகவல் தரப்படுகிறது. இத்தொகையினை கட்டிய பிறகு, முன் உரிமை பதிவேட்டில் கருவி ஒதுக்கிடு செய்ய பதிவு செய்யப்படுகிறது. கருவிகள் முன் உரிமை பதிவேட்டின்படியும் நில அருகாமையினைப் பொருத்தும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

2. கருவியை எடுத்துச் செல்வதும், தொடர்ந்து செயல் படுத்துவதும் விவசாயியின் முழு பொறுப்பு.

3. கருவி விவசாயியின் பொறுப்பில் இருக்கும்போது, பாதுகாப்பு கொடுப்பதும் சிறந்த முறையில் பேண வழி வகை செய்வதும் அவர் பொறுப் பாகும்.

4. கருவியினை இயக்கத் தேவையான இயந்திர நுகர்பொருள் மசகு எண்ணை நீங்கலாக அனைத்தையும் வாடகைக்கு எடுத்துக் கொள்ளுபவர் கொடுக்க வேண்டும்.

5. கருவியினைத் தொடர்ந்து செயல்பட விவசாயி வேலை கொடுக் காமல் இருப்பாராயின் தண்டத் தொகையாக ரூபாய் 10 (நாள் வாடகையில் 25 விழுக்காடு) நாள் வாடகையுடன் சேர்த்து ரூபாய் 50 செலுத்துவதற்கு உரியவராவர்.

6. தம் நிலத்தில் வேலை முடிந்தவுடன் கருவியினை உதவி செயற் பொறியாளர்க்கு திரும்ப கொண்டு வந்து விடுதலும் அவர் பொறுப்பாகும்.